


# 08.10.2026 செய்திகள்

## வட்டி விகிதத்தை உயர்த்தியது ரிசர்வ் வங்கி

- அமெரிக்கா – ஈரான் போர் காரணமாக கச்சா எண்ணெய் விலை உயர்ந்ததால் பணவீக்கம் உயர்ந்து ரூபாய் மதிப்பும் சரிந்து வருகிறது.
- இந்நிலையில், ரிசர்வ் வங்கியின் நிதிக்கொள்கைக் குழு கூட்டம் ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா தலைமையில் மும்பையில் நடைபெற்றது.
- இக்கூட்டத்தில், வங்கிகளுக்கு வழங்கப்படும் குறுகியகால கடன் மீதான (ரெப்போ) வட்டி விகிதத்தை 5.25-லிருந்து 5.5 சதவீதமாக உயர்த்த ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.
- கடைசியாக 2023-ம் ஆண்டு வட்டி உயர்த்தப்பட்டது. மூன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு வட்டி உயர்த்தப்பட்டுள்ளது.
- ரெப்போ விகிதத்தை 0.25% உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது சர்வதேச அளவில் பணவீக்கம் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- வர்த்தக நிச்சயமற்ற தன்மை தொடர்ந்து நீடிக்கிறது. உலகளாவிய சூழல் பலவீனமாகவே உள்ளது. போரின் தாக்கமும் வர்த்தகம் மற்றும் விநியோகச் சங்கிலிகளை சீர்குலைக்கக்கூடும். இருப்பினும், இந்தியப் பொருளாதாரம் வலுவாக இருக்கிறது.

SURESH'

### நூற்றாண்டு பழமையான வேதியியல் புதிருக்கு தீர்வு கண்ட

## பிரான்ஸ், ஜப்பான் விஞ்ஞானிகளுக்கு நோபல் பரிசு

- நேரியல் அல்லாத விளைவுகள் தன்வினையூக்கம் ஆகியவற்றை கண்டறிந்ததற்காக பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஹென்றி பி.காகன், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த கென்சோசோய் ஆகிய இரு விஞ்ஞானிகளுக்கு நோபல் பரிசு பகிர்ந்தளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டுக்கான பரிசு அடிப்படை வேதியியலுக்கானது. அமினோ அமிலங்கள் போன்ற சில மூலக்கூறுகள், ஒன்றுக்கொன்று கண்ணாடி பிம்பங்களாக இருக்கும் இரண்டு வகைகளாக உள்ளன.
- இருப்பினும், உயிரி மூலக்கூறுகள் இந்த கண்ணாடி பிம்பங்களில் ஒன்றை மட்டுமே கொண்டுள்ளன. இதுபோன்ற வேதியியல் சமச்சீரின்மை எவ்வாறு தோன்றியிருக்கக்கூடும் என்பது வேதியியலாளர்களுக்கு நீண்டகாலமாக ஒரு புதிராகவே இருந்து வந்தது.
- நூற்றாண்டு பழமையான இந்தப் புதிருக்கு ஒரு தீர்வைக் கண்டுபிடித்ததற்காக ஹென்றி பி.காகன் மற்றும் கென்சோ சோய் ஆகியோருக்கு 2026-ம் ஆண்டுக்கான வேதியியல் நோபல் பரிசு வழங்கப்படுகிறது என்றார்.

## புதிருக்கு தீர்வு கண்டது எப்படி?

- நமது இடது மற்றும் வலது கைகளைப் போலவே, சில மூலக்கூறுகள் ஒன்றுக்கொன்று கண்ணாடி பிம்பங்களாக இருக்கும் இரண்டு வடிவங்களில் காணப்படுகின்றன.
- அவற்றில் ஒரே மாதிரியான அணுக்கள் ஒரே விதமாக இணைந்திருந்தாலும், அவற்றின் தன்மை வேறுபட்டவை. இந்த வேறுபாடு உயிரியலில் மிகவும் முக்கியமானதாக அமைகிறது.
- புரதங்களின் கட்டுமானக் கூறுகளான அமினோ அமிலங்கள் இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. அவை ஒன்றுக்கொன்று எதிரெதிரான இரண்டு வடிவங்களில் இருக்க முடியும்.
- ஆனால் உயிரினங்கள் புரதங்களை உருவாக்க அவற்றுள் ஒன்றை மட்டுமே பெருமளவில் பயன்படுத்துகின்றன. இது உயிர் எப்படி ஒரு மூலக்கூறு வடிவத்தை மற்றொன்றை விடத் தேர்ந்தெடுத்தது? என்கிற அடிப்படை கேள்வியை எழுப்புகிறது.
- பல ஆண்டுகளாக, வேதியியலாளர்கள் இதற்கு விடையளிக்கப் போராடினர். இரண்டு கண்ணாடி பிம்ப வடிவங்களில் இருக்கக்கூடிய மூலக்கூறுகளை அவர்கள் உருவாக்க முயன்றபோது, வேதி வினைகள் பொதுவாக இரண்டு வடிவங்களையும் ஏறக்குறைய சமஅளவில் உருவாக்கின.
- ஹென்றி பி.காகன், 1986-ல் ஒரு முக்கியமான திருப்புமுனையை ஏற்படுத்தினார். வேதிவினைகள் எப்போதும் ஒரு முழுமையான சமநிலையில் நிகழ வேண்டியதில்லை என்பதை அவருடைய ஆய்வு காட்டியது.
- அதன்பிறகு கென்சோ சோய் 1995-ல் ஒரு மூலக்கூறின் ஒரு பக்கச் சாய்வை பெருக்கும் ஆற்றல் கொண்ட ஒரு வேதிவினையை அறிவித்தார்.
- அந்த வினையானது தன்வினையூக்கத்தை உள்ளடக்கியிருந்தது. 2003-ல் சாத்தியமான இரண்டு கண்ணாடி பிம்ப வடிவங்களில் அடிப்படையில் ஒன்றை மட்டுமே உருவாக்கும் ஒரு வினையை கென்சோ சோய் செய்து காட்டினார். இது ஒரு மைல்கல் சாதனையாகும்.
- ஏனெனில் உயிரியல் அமைப்புகளைத் தவிர, வேறு எந்த விஞ்ஞானிகளாலும் இதற்கு முன்பு இத்தகைய உயர் அளவிலான வேதியியல் திசைச்சார்பை தன்னிச்சையாக அடைய முடிந்ததில்லை.

SURESH'



| TUTICORIN | TIRUNELVELI | RAMANATHAPURAM | MADURAI | CHENNAI | COVAI | TENKASI | SALEM |
|---|---|---|---|---|---|---|---|
| 99445 11344 | 98942 41422 | 75503 52916 | 98431 10566 | 97555 52003 | 90433 10773 | 98840 51717 | 95147 89102 |